செ.வெ. எண்: 141 நாள் : 14.02.2011.

# போராட்டத்தை கைவிட்டு, பேச்சுவார்த்தைக்கு அழைப்பு முதலமைச்சர் கலைஞர் அறிக்கை.

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி பால் உற்பத்தியாளர்களில் ஒரு சாரார் கடந்த ஏழு நாட்களாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். சென்ற திங்களும், இதே போல பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று கோரி போராட்டம் ஒன்றினைத் தொடங்கப் போவதாக அறிவித்தவுடன் தமிழக அரசின் சார்பில் துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசப்பட்டது. அந்தப் பேச்சின் முடிவாகத் தான் பசும்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் பத்து காசு என்றும், எருமைப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் இருபது காசு என்றும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. ஆனாலும் அந்த நேரத்தில் நுகர்வோர் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பாலின் விற்பனை விலையை அரசு உயர்த்தவில்லை. இந்தச் செய்தி அனைத்து ஏடு களிலும் வெளி வந்தது.

ஆனாலும் அதற்குப் பிறகு மீண்டும் பால் உற்பத்தியாளர்கள் பாலின் கொள்முதல் விலையினை மேலும் உயர்த்த வேண்டுமென்று ஒரு சாரார் ஏழு நாட்களாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆனால் இதைப் பற்றிய நல்ல எண்ணத் தோடு ஒருசில நாளேடுகளும், ஒரு சில அரசியல் கட்சியின் தலைவர்களும், பால் கொள் முதல் விலை குறித்து, அரசு அவர்களை அழைத்து இது வரை பேசவில்லை என்பதைப் போல கருதிக் கொண்டு அழைத்துப் பேசுவதில் என்ன தவறு என்று கேட்கிறார்கள். கடந்த திங்கள் அவர்களை அழைத்துப் பேசித் தான் கொள் முதல் விலை உயர்த்தப்பட்டது. மீண்டும் அவர்களை அழைத்துப் பேசுவதைப் பற்றி அரசுக்கு எந்த கௌரவப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்கள் திடீரென்று வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்து – பாலை புனிதமாகக் கருதிட வேண்டிய அவர்களே, ஒரு சில லிட்டர் பாலைக் கொண்டு போய் சாலையிலே ஊற்றி, அதனைப் புகைப்படமாகவும் எடுக்கச் செய்து ஒரு சில ஏடுகளிலும், தொலைக் காட்சிகள் மூலமாகவும் செய்தியாக்கியது தான்வேதனைக்குரியது. எது எப்படியிருந்த போதிலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் நியாயமான

கோரிக்கைகளில், மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகுந்த அக்கறையுடனும் பரிவுடனும் செயல்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப் போனால் நான் நேற்றே குறிப்பிட்டுள்ளதைப் போல கடந்த நான்கரை ஆண்டுகளில் இதற்கு முன்பு எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு நான்கு முறை கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் மீண்டும் அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்ற யோசனையை அரசு ஏற்றுக் கொண்டு நாளை (15—2—2011) தலைமைச் செயலகத்தில், மாலை 4 மணி அளவில் அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, பொன்முடி, மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதுவரை போராட்டம் நடத்தியவர்கள் மீது போடப்பட்டிருந்த வழக்கினை நல்லெண்ண அடிப்படையில் திரும்பப் பெறவும் முடிவு செய்துள்ளதுடன், போராட்டக் குழுவினரும் உடனடியாக தங்கள் போராட்டத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வெளியீடு: —

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.